[2003 ஏப்ரல் 8

206—

L.S.S. பேருந்து

***6457—திருமதி எஸ். கனிதா சம்பத்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் - செங்கல்பட்டு வழித்தடத்தில் L.S.S. பேருந்து இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர்—செங்கல்பட்டு வழித்தடத்தில் L.S.S. பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ். கனிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் அம்மாவிற்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய திருப்போரூர் தொகுதியில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிரசித்தி வாய்ந்த முருகன் கோவில் உள்ளது. அங்கு வரும் பக்தர்களின் நலனைக் கருதி -- அதுமட்டுமல்லாமல் எனது திருப்போரூர் தொகுதி மக்கள், நீதிமன்றம், தாலுக்கா அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம் ஆகியவற்றுக்கு செங்கல்பட்டு வரவேண்டும். ஆதலால், என்தொகுதி மக்களின் நலனைக் கருதி நமது இதய தெய்வம் தமிழகத்தின் முதல்வர் பொற்கால ஆட்சியில் மறு பரிசீலனை செய்து L.S.S. பேருந்து வழித் தடம் இந்த நிதியாண்டிலாவது ஏற்படுத்தித் தரப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பிரதான சாலைகளில் அதிக அளவிலே பேருந்துகள் இயக்கப்படுகின்ற வழித் தடங்களில் மட்டுமே, L.S.S. பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால் திருப்போரூரைப் பொறுத்தவரையில், திருப்போரூர், செங்கல்பட்டிலிருந்து உட்புறமாக அமைத்துள்ளது. ஆகவே இந்தத் தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளின்

2003 ஏப்ரல் 8]

எண்ணிக்கையும் சற்றுக் குறைவாக இருக்கிறது. எனவே இத்தடத்தில் L.S.S. பேருந்துகள் இயக்கினால் பொதுமக்கள் மத்தியில் எதிர்ப்புகள் வரலாம் என்று கருதுகிறோம். எனவே பொதுமக்கள் மத்தியிலே எதிர்ப்புகள் வராமல் இருக்குமானால், பொதுமக்களுடைய கோரிக்கைகளை ஏற்று இந்த வழித் தடங்களில் L.S.S. பேருந்துகள் விடுவதை அரசு பரிசீலிக்கும் என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அநேகமாக இந்தப் பதில் மூலம் நமது டாக்டர் ஜெயக்குமார் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன். காரணம், நேற்றுக்கூட இங்கே ஆளும் கட்சித் தரப்பு எம்.எல்.ஏ.க்கள் கேட்டால் மட்டும் 'positive answer' சொல்கிறீர்கள் எங்களுக்கு negative answer சொல்கிறீர்கள் என்று சொன்னார்கள். இப்போது எங்களுடைய ஆளும் கட்சித் தரப்புச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 'Negative' ஆகவே இல்லை என்று சொல்லி இருக்கிறோம். ஆகவே இதிலிருந்து புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பிரச்சினையின் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல் அனைவரையும் சமமாகப் பாவிக்கின்ற அரசாகச் செயல்படுகிறது என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூரைச் சுற்றி இருக்கிற பகுதியிலே நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அவர்கள் முக்கியமாக வரவேண்டுமென்றால் செங்கல்பட்டு வரவேண்டும். அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் இருக்கிற மக்கள் அந்த வழித் தடத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். காலையிலும், மாலையிலும் மாணவர்கள், தொழிலாளர்கள் பொதுவாக அலுவலகத்திற்கு வருவது அதிகரித்து வருவதால் பஸ்சின் கூரை மீது ஏறி வரும் அவல நிலை இருக்கிறது. இது பல பத்திரிகைகளிலே செய்தியாக வந்திருக்கிறது. எனவே அங்கே -- 3 பேருந்துகள் T.80 பேருந்து இயக்கப்படுகிறது 15 நிமிடங்களுக்கு ஒரு பேருந்தாவது இயக்க அமைச்சர் முன் வருவாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர்-செங்கற்பட்டு வழித்தடத்தில், காஞ்சிபுரம் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக ஏற்கெனவே

3 பேருந்துகள் அல்ல, 4 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தனியார் பேருந்துகள் 5 அந்த வழித்தடத்திலே இயக்கப்பட்டு வருகின்றன. இன்னும் கூடுதலாகப் பேருந்து வசதி தேவை என்று கருதினால், நிதி நிலைமைக்கேற்ப, பயணிகளுடைய அடர்வுகளைக் கணக்கெடுத்து, தேவைக்கேற்ப இதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 207, திரு. அ. நடராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

207—

சிற்றுந்து இயக்குதல்

***11016—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மேலப்பலையூர் ஊராட்சி, மேலப்பலையூர் கிராமத்திற்குச் சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மேலப்பலையூர் ஊராட்சி, மேலப்பலையூர் கிராமத்திற்குச் சிற்றுந்து இயக்க அனுமதி கேட்டு யாரேனும் மனுச் செய்யும் பட்சத்தில் விதிமுறைகளுக்குட்பட்டுப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இரண்டாண்டு கால ஆட்சியில் எடுக்கப்பட்ட சிக்கன நடவடிக்கையாலும், சீர்மிகு நிர்வாகத் திறத்தாலும் நட்டத்தில் மூழ்கிய போக்குவரத்துத் துறை மீட்கப்பட்டுள்ளது என்பதைத் தமிழக மக்கள் பலரும் பாராட்டுகின்ற இந்த வேளையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றுந்து இல்லை என்றாலும், எனது தொகுதி குடவாசல் ஒன்றியத்தில் உள்ள மேலப்பலையூர் கிராமத்திற்கும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS